கூடுதல்  மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண்  22/2021

வாதி தரப்பு சாட்சி -1  கோவிந்தராஜ்  திருமதி.ஏ.பிரேமா பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 23.04.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**1 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. இந்த வழக்கு விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். இவ்வழக்கின் பரிகாரம் என்ன என்றால் கோவிலில் சாமி  கும்பிடுவதை பிரதிவாதிகள் தடுத்ததால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.  இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர் வழக்குரையில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். கருப்பசாமி கோவில்,  பிடாரியம்மன் கோவில்,  பாம்பாலம்மன் கோவில் ஆகிய கோவில்கள் மூன்று பண்ணைக்கும் பொதுவான கோவிலாக உள்ளது  என்று வழக்குரையிலும், முதல் விசாரணையிலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். சீலக்காரியம்மன், குட்டகாரியம்மன் ஆகிய  கோவில்களும் மூன்று பண்ணைகளுக்கு மட்டும் பொதுவாக பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

2. வேறு யாருக்கும் மேற்படி கோவில்களில்  பாத்தியம்  இல்லை என்றால் சரிதான். மேற்படி கோவில்கள் எங்கள் பண்ணைக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்ட ஏதேனும் ஆவணங்கள் வைத்துள்ளேனா என்றால் 2015 ல் மண்டபம் கட்டி கும்பாபிஷேகம் நடைபெற்றது.  மேற்படி கோவிலுக்கு மின் இணைப்பு பெறப்பட்டுள்ளது. அதற்கான ஆவணங்கள் உள்ளது. மேற்படி ஆவணங்களை தவிர வேறு ஆவணங்கள் ஏதேனும் உள்ளதா என்றால் வரி வசூல் செய்வதற்கான வரி ஏடு மட்டும் உள்ளது.  மேற்படி ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.7 ஆவணம் யார் வேண்டுமானலும் தயார் செய்து கொள்ளலாம் என்றால் சரியல்ல. அது  கோவில் கும்பாபிஷேகத்திற்காக அச்சடிக்கப்பட்ட பத்திரிக்கையின் அசல் ஆவணமாகும்.  வா.சா.ஆ.1 ஆவணம் தாவா கோவிலுக்கான புகைப்படம் என்றால் சரிதான்.

3. என்னிடம் காட்டப்படும் புகைப்படும் தாவா கோவிலில் உள்ள கல்வெட்டு என்றால் சரிதான்.  மேற்படி புகைப்படம் **பி.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பி.சா.ஆ.1 ல் குறிப்பிட்டுள்ள வீ.கனகராஜ் மற்றும் ஏ.வீராச்சாமி ஆகியோர் எங்கள் பண்னைணை சேர்ந்தவர்களா என்றால் இல்லை. அவர்கள் முறையே பெரிய பண்னை மற்றும் சின்ன பண்னையை சேர்ந்தவர்கள். கோவில் கும்பாபிஷேகம் முடிந்த பிறகு நன்கொடை வழங்கினார்கள். அதனால் அவர்களின் பெயர்கள் தாவா கோவில் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது. மேற்படி பி.சா.ஆ.1 ல் குறிப்பிட்டுள்ள பி.பாலசுப்பிரமணி , சண்முகம் மற்றும் முருகேசன் ஆகியோர்கள் எங்கள் பண்னையை சேர்ந்தவர்களா என்றால் இல்லை. அவர்கள் சின்ன பண்னையை சேர்ந்தவர்கள்.

4. தாவா கோவில் அனைத்து பண்னைக்கும் பொதுவான கோவில் தான் என்றும், அதனால் தான் அவர்கள் பெயர்கள் தாவா கோவில் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா கோவில் நடுப்பண்னைக்கு மட்டுமே பாத்தியப்பட்டதாகும். மேற்படி நபர்கள் நன்கொடை வழங்கியதால் அவர்கள் பெயர்கள் கல்வெட்டில் உள்ளது. தாவா கோவில் நிலம் யார் பெயரில் உள்ளது என்றால் புறம்போக்கு நிலத்தில் உள்ளது. தாவா கோவில் உள்ள நிலத்தை பொறுத்து கோவில் பெயரில் ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். தாவா கோவிலுக்கு நான் தான் அறங்காவலர் என்பதற்கான எந்த ஆவணங்களும் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். நாங்கள் தான் தாவா கோவிலை பராமரித்து வருகிறோம். தாவா கோவில் எங்களுக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்பதை காட்ட வருவாய் ஆவணங்களோ அல்லது நீதிமன்ற உத்தரவோ ஏதும் இல்லை என்றால் சரிதான்.

5. சீலக்காரியம்மன், குட்டகாரியம்மன் கோவில் சம்மந்தமாக அமைதி பேச்சு வார்த்தை மூன்று முறை நடத்தப்பட்டது. தாவா கோவில் அரசாங்க நிலத்தில் உள்ளது என்பதாலும், அதனால் தான் தாவா கோவிலை பொறுத்து அமைதி பேச்சு வார்த்தை நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக பொய்யாக தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 ஆவணமான மின் இணைப்பு ஆவணம் எங்கள் பண்னையை சேர்ந்த ஒரு தனிநபர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். தாவா கோவில் பெயரில் மின் இணைப்போ அல்லது வேறு ஆவணமோ இல்லை என்றால் சரிதான். எங்கள் பங்காளிகள் பெயரில் கோவிலுக்கு மின் இணைப்பு பெறப்பட்டது. வா.சா.ஆ.8

ஆவணம் கோவிலுக்குண்டான மின் இணைப்பு இல்லை என்றால் சரியல்ல.

6. வா.சா.ஆ-8 ஆவணமான மின் இணைப்பு ராசு பெயரில் உள்ளது. அவர் இவ்வழக்கில் தரப்பினராக உள்ளரா என்றால் இல்லை. அவர் தற்சமயம் இறந்துவிட்டார். அவர் இறந்து சுமார் 20 வருடங்களுக்கு மேலாக இருக்கும். வா.சா.ஆ.8 ஆவணம் மேற்படி ராசு என்பவர் இறப்பிற்கு பின்னிட்டு ஏற்பட்ட ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ராசு இறந்து 20 வருடங்களுக்கு மேலாகியும் ஏன் மின் இணைப்பிற்கான பெயரை மாற்றவில்லை என்றால் பொதுவாக கோவிலுக்குண்டான மின் இணைப்பு என்பதால் பெயர் மாற்றம் செய்யப்படாமல் இருந்தது. வா.சா.ஆ.8 மின் இணைப்பு கோவிலுக்குண்டான மின் இணைப்பு இல்லை என்றும், அதனால் தான் மின் இணைப்பிற்கான பெயர் மாற்றம் தற்போது வரை செய்யப்படாமல் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி ராசுவின் மனைவி மற்றும் மகன்கள் உயிருடன் இருக்கிறார்களா என்றால் இருக்கிறார்கள்.

7. அவருக்கு இரண்டு மகன்கள் மற்றும் இரண்டு மகள்கள் உள்ளனர். மேற்படி நபர்களில் குமார் என்ற ஒருவரை தவிர மற்றவர்கள் இவ்வழக்கில் தரப்பினர்கள் இல்லை என்றால் சரிதான். கோவில் சம்மந்தப்பட்ட முக்கியஸ்தர்களை மட்டும் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளது. வழக்குரையிலோ, எனது பிரமாண வாக்குமூலத்திலோ மேற்படி விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.8 ஆவணத்தின் உரிமையாளர் இறந்துவிட்ட பின்பு அவரது வாரிசுகளை இவ்வழக்கில் தரப்பினர்களாக காண்பித்தால் தாவா கோவிலை பற்றிய உண்மை நிலை தெரிந்துவிடும் என்பதால் அவர்களை தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா-ஆ.8 ஆவணத்திற்கும் தாவா கோவிலுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

8. வா.சா.ஆ.9 ஆவணத்திற்கும் தாவா கோவிலுக்கும் சம்மந்தம் உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா-ஆ-9 ல் உள்ள விவரங்களை பற்றியும் தெரியாது. வா.சா.ஆ.9 ஆவணம் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வா.சாஆ-9 ஆவணம் எந்த கோவிலுக்கு சம்மந்தப்பட்ட ஆவணம் என்று தெரியாது. வா.சா.ஆ-9 ஆவணத்தில் உள்ள விவரங்கள் பற்றி எனக்கு தெரியாது. எனக்கு எழுத படிக்க தெரியாது என்பதால் அதில் உள்ள விவரங்கள் பற்றி எனக்கு

தெரியாது. தாவா கோவில் புறம்போக்கு நிலத்தில் உள்ளதால் வட்டாட்சியரை வழக்கில் தரப்பினராக சேர்த்திருக்க வேண்டும் என்றும், அவ்வாறு சேர்க்காததால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. தாவா கோவில் உள்ள புறம்போக்கு நிலத்தை பொறுத்து பரிகாரம் வழங்கினால் தவறான முன் உதாரணமாக மாறிவிடும் என்பதால் இவ்வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

9. இவ்வழக்கில் அவசிய தரப்பினர்களை சேர்க்காத காரணத்தினாலும், தாவா கோவில் புறம்போக்கு நிலத்தில் உள்ளதாலும் அதனை பொறுத்து பரிகாரம் கேட்க முடியாது என்பதாலும் வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல. தாவா கோவில் ஊரின் நடு மையத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான். தாவா கோவிலை சுற்றி எங்கள் பண்ணையை சேர்ந்தவர்கள் இரண்டு நபர்கள் மட்டுமே உள்ளனர். மற்றவர்கள் கோவிலிருந்து சற்று தூரம் தள்ளி உள்ளார்கள். ஆனால் எங்கள் ஊரில் தான் உள்ளார்கள். தாவா கோவிலையை பொறுத்து எங்களின் உரிமையையும், அனுபவத்தையும் சரியாக நிரூபிக்காததால் தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**1 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

**9 ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in the open court, read over and interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Additional District Munsif,**
**Kulithalai.**